பலபிட்டிய பிரதேச சபை - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பலபிட்டிய பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவு சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பலபிட்டிய பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச சபைக்கு நன்கொடையாக கிடைத்திருந்த 09 கணினிகள், அச்சு இயந்திரம் ஒன்று உட்பட 12 அலுவலக உபகரணங்களின் பெறுமதி நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.	2025 இறுதிக் கணக்குகள் மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	09 கணினிகள், அச்சு இயந்திரம் ஒன்று உட்பட உபகரணங்கள் நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்ய வேண்டும்.

(ஆ)	மீளாய்வாண்டின் போது வீதவரி வருமான முற்பெறுவனவு ரூபா 734,104 தொகை நிலுவை வீதவரி கணக்கிற்கு வரவு வைத்திருந்தமையால் அந்தப் பெறுமதியினால் சொத்துக்கள் மிகையாகவும், பொறுப்புக்கள் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்குகள் மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வீதவரிக் கணக்கு மற்றும் வீதவரி முற்பெறுவனவு சரி செய்யப்பட வேண்டும்.
(இ)	இலக்கிய நிகழ்ச்சியொன்றுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 106,810 தொகை ஆண்டிற்கான செலவுகளில் உட்படுத்தப்படாமையால், மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை அந்த எண்ணிக்கையால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்குகள் மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	புதிய செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஈ)	நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் இருவருக்கு ரூபா 2.08 மில்லியன் தொகை செலுத்தி தீர்த்திருந்த போதிலும், தொடர்ந்தும் அந்த மீதி கடன்கொடுத்தோர் என காட்டப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்குகள் மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	சரியாக கணக்கீடு செய்தல் மேற்கொள்ள வேண்டும்.
(உ)	02 நிர்மாண வேலைகள் தொடர்பாக 2.98 மில்லியன் தொகை இரண்டு தடவைகள் கணக்கீடு செய்திருந்தமையால் மூலதன உதவி மற்றும் கடன்பட்டோர் கணக்கு மீதி அந்த எண்ணிக்கையால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்குகள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஊ)	ரூபா 5.21 மில்லியனிற்காக செலவுகள் மூலதனப்படுத்தாமையால் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி அந்த எண்ணிக்கையால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்குகள் மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	குறைவாக காட்டப்பட்ட காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி சரி செய்யப்பட வேண்டும்.
(எ)	2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணக் கணக்கின் செலவு மீதி ரூபா 322,962 தொகை எனினும், 2024 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு அதனை வரவு மீதியென முன்கொண்டு வரப்பட்டமையால் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொறுப்புக்கள் அந்த எண்ணிக்கையால் குறைவாகவும் மற்றும் பெற வேண்டிய முத்திரைக் கட்டணச் சொத்து அந்த எண்ணிக்கையால் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்குகள் மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	கணக்கீடு செய்தல் சரயாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஏ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இருப்புக்களின் பெறுமதி ரூபா 1.89 மில்லியனினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்குகள் மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	மிகையாக காட்டப்பட்டிருந்த இருப்புக்களின் பெறுமதி சரி செய்யப்பட வேண்டும்.
(ஐ)	வீதவரிக்காக வழங்கப்பட்டிருந்த கழிவு ரூபா 1.09 மில்லியன் நிலுவை வீதவரிக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாமையால், நிலுவை வீதவரி மீதி அந்த எண்ணிக்கையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்குகள் மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வீதவரி மிகையாக காட்டப்பட்டமை சரி செய்யப்பட வேண்டும்.
(ஒ)	உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு ரூபா 189,646 இற்கான முத்திரைக் கட்டணம் அனுப்பும் போது பலவின வைப்புக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் வைப்புக்களின் பெறுமதி அந்த எண்ணிக்கையால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்குகள் மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	சரியாக கணக்கீடு செய்தல் மேற்கொள்ளல் வேண்டும்.
(ஓ)	மீளாய்வாண்டின் போது ரூபா 3.31 மில்லியன் பெறுமதியான 03 நாட்குறிப்புக்கள் தொடர்பாக உரிய பொதுப் பேரேட்டில் பதிவு செய்யாமையால், அந்த எண்ணிக்கையால் ஓய்வூதிய திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய செலவு மற்றும் கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஆண்டிற்காக செலவு மற்றும் கடன்கொடுத்தோர் குறைவாக காட்டப்பட்டிருந்தது.	2025 இறுதிக் கணக்குகள் மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	குறைவாக பதிவு செய்யப்பட்ட கடன்கொடுத்தோர் பெறுமதி சரி செய்யப்பட வேண்டும்.
(ஔ)	ரூபா 7.79 மில்லியனிற்கான உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதிய பங்களிப்புத் தொகை மீதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.	2025 இறுதிக் கணக்குகள் மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	செலுத்த வேண்டிய உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதிய பங்களிப்புத் தொகை மீதி கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 15 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 297.07 மில்லியன் தொகைக்கான	எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.		
(ஆ)	நிலையான சொத்துக்களின் பெறுமதியாகிய ரூபா 388.35 மில்லியனிற்கான மீதி முதல் மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவுதொகை மற்றும் உதவியின் மூலம் பங்களிப்புச் செய்தல் கணக்கு சமமாக இருக்க வேண்டிய போதிலும், அந்த மீதிகளிடையே ரூபா 157.55 மில்லியனிற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.	2025 இறுதிக் கணக்குகள் மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	கணக்குகளிடையே காணப்பட்ட ரூபா 157.55 மில்லியனிற்கான வித்தியாசத்திற்கான காரணத்தை பரிசோதனை செய்து கணக்குகளை சரி செய்ய வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நாளதுவரை ஆக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 375.52 மில்லியன் தொகைக்கான 05 கணக்கு விடயங்களின் மீதிகளை திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியவில்லை.	அட்டவணைகளை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நாளதுவரை ஆக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஆ)	கூட்டுப் பெறுமதி ரூபா 230.35 மில்லியன் தொகைக்கான 105 நாட்குறிப்புக்களுக்காக நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆண்டு முதல் அனைத்து நாட்குறிப்பு பதிவுகளுக்காகவும், நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	அங்கீகரிக்கப்பட்ட நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 0.9 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 12.1 மில்லியன் தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வீதவரி மற்றும் வரி	23,820,000	21,168,608	17,702,107	37,671,993	22,815,000	22,037,958	19,183,711	34,205,492
வாடகை	5,620,000	4,652,202	4,450,343	4,452,592	5,130,000	6,114,336	4,368,920	4,250,733
அனுமதிப் பத்திரக் கட்டணம்	4,015,000	5,104,178	5,104,178	-	2,810,000	4,063,042	4,077,992	-
	33,455,000	30,924,988	27,256,628	42,124,585	30,755,000	32,215,336	27,630,623	38,456,225

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) வீதவரியும் வரியும்		
(i) மீளாய்வாண்டு ஆரம்பத் திகதியில் உள்ளவாறு ரூபா 34.20 மில்லியனிற்கான நிலுவை வீதவரி மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 37.67 மில்லியன் வரை ரூபா 3.47 மில்லியனினால் அதிகரித்திருந்தது.	எதிர் காலத்தில் அந்த நிலுவையை குறைத்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii) வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டிய 19,516 மொத்த ஆதன எணணிக்கையில் 10,645 ஆதனங்களில் இருந்து மீளாய்வாணடிற்குரிய ரூபா 7.97 மில்லியனிற்காக வீதவரித் தொகையொன்று அறவீடு செய்திருக்காததுடன், அதற்குரிய முன்னைய ஆண்டுகளுக்கான நிலுவை ரூபா 18.98 மில்லியன் தொகையாக காணப்பட்டது.	எதிர் காலத்தில் அந்த நிலுவையை குறைத்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என.	நடைமுறை வீதவரி மற்றும் நிலுவை வீதவரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) வாடகை

(i)	மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்கான சேகரிக்கப்பட வேண்டிய ஒட்டுமொத்த வாடகை வருமானம் ரூபா 8.90 மில்லியன் தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 4.45 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால், வருமானம் சேகரிக்கும் சதவீதம் 50 சதவீதமாக காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 4.45 மில்லியனிற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது.	நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. மற்றும் தேவையான சட்டச் செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளது என.	நிலுவை வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	அகுங்கல்ல பொதுச் சந்தை தொடர் கட்டிடத்தின் 15 கடையறைகளின் உடன்படிக்கைகள் 2023 செப்தம்பர் 30 திகதியில் முடிவடைந்திருந்த போதிலும், தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகோ/2010/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 05 இன் படி மீளாய்வாண்டின் இறுதித் திகதி அளவிலும் அந்த உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கியிருக்கவில்லை.	02 கடைகள் முத்திரை வைக்கப்பட்டுள்ளது எனவும், 02 கடையறைகள் திருப்ப சபைக்கு ஒப்படைத்து ஒரே தடவையில் பெறும் பணத்தின் நிலுவைத் தொகையை தீர்க்கும்படி அறிவித்திருந்ததெனவும், 08 கடையறைகள் உடன்படிக்கை நாளதுவரை ஆக்கப்பட்டுள்ளது எனவும்.	பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி மற்றும் சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும்.

(இ) ஏனைய வருமானங்கள்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 40.67 மில்லியன் தொகையாக காணப்பட்டது.	நிலுவைத் தொகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு பிரதான செயலாளர் அலுவலகம் மற்றும் காணிப் பதிவாளர் திணைக்களத்துடன் இணைந்து முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
அகுங்கல்ல இரண்டு மாடி பொதுச் சந்தைக் கட்டிடத்தின் மீன் வியாபாரம் செய்வதற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த மூன்று கடையறைகள் 2018 ஆண்டு முதல் வருமானம் உழைக்கும் கருமங்களுக்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.	இந்த மீன் விற்பனை நிலையங்களின் கட்டமைப்பை மாற்றி அபிவிருத்தி செய்து இந்த விற்பனை நிலையங்களை பொதுவான வியாபாரத்திற்காக வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என.	கட்டிடத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும்.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு ஒக்தோபர் 04 திகதி வரை களஞ்சியப் பொறுப்பாளரினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 907,040 பெறுமதியான 307 அலகுகளுக்கான மின்சார இருப்பொன்று மின் தொழில்நுட்பவியலாளரினால் பொருத்தப்பட்டிருக்கவில்லை.	விடயங்கள் மின்சார கடமைப் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது என.	வீதி விளக்கு பொருத்துதல் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடு வலுப்படுத்தப்பட வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் கடையறைகள் வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக உடன்படிக்கையின் 18 ஆவது நிபந்தனைகளின் படி சாட்டப்படுகின்ற ஆதனங்களுக்கு அல்லது வளாகத்திற்கு ஏற்படுகின்ற ஏதேனும், சேதங்கள் தொடர்பாக வாடகைக்கு எடுத்தவர் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும், அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் பல்கரும கட்டிடத்தின் 07 ஆம் இலக்க கடையறையின் கண்ணாடி மறைப்பு ஒன்றிற்கு 2023 ஆண்டில் இரண்டு சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருந்த சேதங்கள் காரணமாக மீண்டும் திருத்த வேலை அலுவல்கள் மேற்கொள்வதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 147,463 தொகை செலவிடப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் கடையறைகளுக்காக உடன்படிக்கை மேற்கொள்ளும் போது ‘‘வாடகைக்கு எடுப்பவரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட காப்புறுதி அணவல் ஒன்று பெற்றுக்கொள்ள வேண்டும்’’ என்ற நிபந்தனையொன்று உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும் மற்றும் ஏற்பட்டிருந்த சேதம் தொடர்பாக கண்டறிந்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது என.	வாடகைக்கு கொடுத்த பின்னர் ஏற்படக்கூடிய சேதங்கள் வாடகைக்கு எடுத்தவரிடம் அறவீடு செய்யப்பட வேண்டும்.

(ஆ)	கொஸ்கொட உப அலுவலக கட்டிடத்தின் மேல் மாடி சுமார் ஐந்து வருடங்கள் முதல் விளைவற்றுக் காணப்பட்டதுடன், இந்த கட்டிடத்தின் கூரையின் திருத்த வேலை மேற்கொண்டு ஆக்கபூர்வமான கருமங்களுக்காக பயன்படுத்தியிருக்கவில்லை.	எதிர் காலத்தில் கூரை திருத்த வேலை மேற்கொண்டு ஆக்கபூர்வமான கருமங்களுக்காக பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என.	சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும்.

3.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஹீனடிய பொது விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்காக 2022 ஆண்டு ரூபா 600,000 தொகையும் ஆந்தாதொல டெனிஷன் சில்வா விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1.6 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும், இந்த இரண்டு விளையாட்டுத் திடல்களும் பயன்படுத்தக்கூடிய மட்டத்தில் ஆக்கியிருக்கவில்லை.	கிடைக்கக்கூடிய ஏற்பாடுகள் மீது எதிர் காலத்தில் கட்டம் கட்டமாக அல்லது முழுமையாக அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என.	நிதியம் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	2019 ஆண்டின் போது சபைக்கு உரித்தாக்கியிருந்த பல்கரும கட்டிடத்தின் தரைமாடி வருமானம் உழைப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், இரண்டாவது மாடி நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் அதன் ஸ்லப்(slab) சுற்றாடலுக்கு திறந்த நிலையில் காணப்படுவதால் சிதைவடைந்து மற்றும் முதலாம் மாடிக்கு நீர் ஒழுகக்கூடிய ஆபத்து நிலையொன்று காணப்பட்டதுடன், அதன் நிர்மாண வேலைகளை பூர்த்தி வருமானம் உழைக்கும் கருமங்களுக்காக பயன்படுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கூரையின் வேலையை பூர்த்தி செய்வதற்கு சபை நிதியம் போதியளவாக காணப்படாமையால உள்நாட்டு கடன் நிதியத்திலிருந்து கடன் தொகையொன்று அல்லது வேறேதேனும் ஏற்பாடொன்றின் மீது கட்டிடத்தின் அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருமானம் உழைக்கும் கருமங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	கட்டிடத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்தக்கூடியவாறு நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	தொடவத்த ராஜபக்ஷ மாவத்தையை அபிவிருத்தி செய்வதற்காக முன்னைய ஆண்டின் போது சபை நிதியத்தின் ஏற்பாடுகள் மீது ரூபா 1.8	இந்த நிர்மாண வேலைக்காக மதிப்பீடு 2023 ஆண்டு ஒக்தோபர் மாதம் 07 ஆந் திகதி	சபை நிதியத்திற்கு அனுகூலமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன்,

	மில்லியனிற்கான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு ரூபா 1.77 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த நிர்மாண வேலைக்காக தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் அறிமுகப்படுத்தியிருந்த 2023 ஆண்டின் இரண்டாவது அரையாண்டு விலை விகிதாசாரத்தை பயன்படுத்தாமல் 2023 மே மாதம் விலை விகிதாசாரத்தை பயன்படுத்தப்பட்டமையால் சபை நிதியத்திற்கு ரூபா 177,938 தொகையிற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.	தயாரிக்கப்பட்டிருந்ததெனவும், அதனை 2023 ஒக்தோபர் 10 திகதி கைத்தொழில் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததெனவும், கூறுவிலைகள் உள்ளூராட்சித் திணைக்களத்தினால் 2023.10.24 திகதியே கிடைத்திருந்தது.	ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மனிதவள திட்டத்தின் படி மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு சபையின் 13 உத்தியோகத்தர்களின் மிகையொன்று காணப்பட்டது.	இந்தப் பதவிகளை அங்கீகரித்துக்கொள்வதற்காக முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை 03/2014 இன் படி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என.	சபையின் செய்பணிகள் மற்றும் விடயப் பரப்பின் படி பதவியணி மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2001 ஆகஸ்ட் 22 திகதிய 18/2001 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் படி 05 வருடங்களுக்கு மிகையாக சேவையாற்றிய உத்தியோகத்தர்களுக்கு வருடாந்த இடமாற்றம் வழங்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணங்காமால் பலப்பிடிய பிரதேச சபையில் கடமையாற்றிய 15 உத்தியோகத்தர்கள் 06 வருடங்களுக்கும் 25 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் அங்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.	இடமாற்றம் செயற்படுத்தும் போது அந்த பதவிகளுக்குரிய இடமாற்றம் வழங்கப்படும் போது அலுவலகத்தில் தடுத்து வைக்காமல் இடமாற்றத்தை செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி இடமாற்றங்களுக்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.